# ஈழத்து முஸ்லிம் பெண் கவிதைகள்: தொகுநிலை நோக்கு

**எம்.ஏ. முஹம்மது றமீஸ்**
மொழித்துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
rameezmam@seu.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்:

‘பெண்’ பற்றிய கருத்துநிலை மானிடப் பிறப்போடு உருவானதொன்றாகும். ஆனால், மனித வாழ்விலும் சமூக வாழ்விலும் அவள் பெற்று வருகின்ற இடம் பெண் பற்றிய விவாதங்களை வரலாற்றில் ஏற்படுத்திற்று. இன்று பெண் பற்றிப் பேசுவது ஒரு இஸமாகவும் அதனது உள்ளார்ந்த விடயங்களை அலசுவது, அது பற்றிய அரசியலாகவும் மாறிவிட்டது. ஈழத்து முஸ்லிம் பெண் கவிதைகள் என்று எழுதவருகிறபோது அதில் பல்வேறு விதமான பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. முதலில் ‘முஸ்லிம் பெண்’ என்பதனாலே இந்தப் பிரச்சினை அடிப்படையாகிறது. சமகால இலக்கியத்தில் குறிப்பாகக் கவிதைகளில் வரும் படிமங்களும் சித்திரிப்புக்களும் மிகக் கவர்ச்சிகரமானவையாகவும் பிரக்ஞை பூர்வமானவையாகவும் அமைந்து விடுகின்றது. பெண் தன்னை முழுமையாகப் பேச வருகின்றபோது, பெண் பற்றிய உணர்வு நிலைகளோடு மாத்திரம் நின்று விடாது சமகால இலக்கியத்தின் உயர்நிலை சித்திரிப்புக்குள்ளும் அமிழ்ந்து கொண்டே அதனை வெளிப்படுத்துகிறபோது அதற்கு இருக்கிற விமர்சனங்கள் மிக அழுத்தமுடையனவாக மாறி விடுகின்றன. இலங்கையின் இன முரண்பாட்டுச் சூழ்நிலையும், இன முரண்பாட்டுக்குப் பின்னரான சூழ்நிலையும் கூட ‘பெண்’ பற்றிய பிரச்சினைகளைப் புதிய தளத்துக்கு நகர்த்தியுள்ளன. பாதிக்கப்பட்ட பெண்ணினது உணர்வுகள் இந்தச் சூழ்நிலையின் ‘பிரதி’களாகவும் அமைந்து விடுகின்றன. பெண் இருப்பு, அதனோடு அவள் சார்ந்த சமூக இருப்பு முதலானவையும் கவிதைகளில் வெளிப்படத் தொடங்கின. 1980களிலே பெண்கள் தமது சமூக இருப்புக் குறித்தும் பணிகள் குறித்தும் அதிகம் விழிப்புணர்வுள்ளவர்களாகச் செயற்பட்டனர். அதன் பிரதான உபாயமாக அவர்கள் இலக்கியத்தைக் கையாளத் தொடங்கினர். அவ்வகையிலே தமிழ் பேசும் ஈழத்துப் பெண் கவிஞர்கள் எழுதிய ‘சொல்லாத சேதிகள்’ என்ற கவிதைத் தொகுதி 1986இல் வெளியானது. ஈழத்துத் தமிழ் பேசும் சமூகத்துள் முஸ்லிம்களும் உள்ளடங்குவர். அவர்கள் தமிழ் மொழியைப் பேசுபவர்களாயினும் பண்பாடு, அரசியல், சமயம் என்றவகையில் வேறுபட்ட ஒரு இனக் குழுவினராகவே அடையாளப்படுத்தப்பட்டனர். ஈழத்தில் 1980களில் நிலவிய இன முரண்பாடு இந்த அடையாளத்திற்கு அதிக அழுத்தம் கொடுத்தது. பொதுவாக ஈழத்துப் பெண்களிடம் ஏற்பட்ட விழிப்புணர்ச்சி அதே சமகாலத்தில் முஸ்லிம் பெண்களிடத்தில் ஏற்பட்டதாகக் கூற முடியாது. முஸ்லிம் பெண்கள் கல்வி கற்பதற்கே ஒரு காலத்தில் தடை இருந்தது. சமூக ஈடுபாடுள்ளவர்களாகச் செயற்பட அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. அவள் வீட்டுக்குரியவளாகவும் வீட்டு நிர்வாகத்தை நடத்துவதற்குரியவளாகவுமே கணிக்கப்பட்டாள். சித்திலெப்பையின் ‘அசன்பே’ கதையில் வரும் பாளினாவே முஸ்லிம் மறுமலர்ச்சியின் அடையாளமாவாள். பாளினாவைப் போன்ற முஸ்லிம் பாத்திரத்தைக் காண இச் சமூகத்தில் 100 வருடம் எடுத்திருக்கிறது. ஈழத்துத் தமிழிலக்கிய உலகில் முஸ்லிம் பெண் கவிஞர்களின் கவிதைகளையும் அவர்களது கவிதைகளின் பேசுபொருளையும் கண்டறிதலும் வெளிக்கொணர்தலையும் ஆய்வு நோக்கமாகக் கொண்ட இவ்வாய்வில் முதலாம் நிலை, இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்படவுள்ளன. குறிப்பிட்ட பெண் கவிஞர்களின் கவிதைத் தொகுதிகள் முதலாம் நிலைத் தரவுகளாகவும் இவ்வாய்வு தொடர்பான ஏனைய கட்டுரைகள், விமர்சனங்கள் அடங்கிய நூல்களும் சஞ்சிகைகளும் பத்திரிகைகளும் இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் பயன்படுத்தப்படவுள்ளன. சமூகவியல், விளக்குமுறை, ஒப்பீட்டு, விபரண ஆய்வு முறையியல் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படும்.

***பிரதான சொற்பதங்கள்:*** *பெண், கவிதைகள், முஸ்லிம், ஈழம், இலக்கியம்*

## அறிமுகம்:

‘பெண்’ பற்றிய கருத்துநிலை மானிடப் பிறப்போடு உருவானதொன்றாகும். ஆனால், மனித வாழ்விலும் சமூக வாழ்விலும் அவள் பெற்று வருகின்ற இடம் பெண்

பற்றிய விவாதங்களை வரலாற்றில் ஏற்படுத்திற்று. இன்று பெண் பற்றிப் பேசுவது ஒரு இஸமாகவும் அதனது உள்ளார்ந்த விடயங்களை அலசுவது, அது பற்றிய அரசியலாகவும் மாறிவிட்டது.

ஈழத்து முஸ்லிம் பெண் கவிதைகள் என்று எழுதவருகிறபோது அதில் பல்வேறு விதமான பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. முதலில் ‘முஸ்லிம் பெண்’ என்பதனாலே இந்தப் பிரச்சினை அடிப்படையாகிறது. சமகால இலக்கியத்தில் குறிப்பாகக் கவிதைகளில் வரும் படிமங்களும் சித்திரிப்புக்களும் மிகக் கவர்ச்சிகரமானவையாகவும் பிரக்ஞை பூர்வமானவையாகவும் அமைந்து விடுகின்றது. பெண் தன்னை முழுமையாகப் பேச வருகின்றபோது, பெண் பற்றிய உணர்வு நிலைகளோடு மாத்திரம் நின்று விடாது சமகால இலக்கியத்தின் உயர்நிலை சித்திரிப்புக்குள்ளும் அமிழ்ந்து கொண்டே அதனை வெளிப்படுத்துகிறபோது அதற்கு இருக்கிற விமர்சனங்கள் மிக அழுத்தமுடையனவாக மாறி விடுகின்றன.

இலங்கையின் இன முரண்பாட்டுச் சூழ்நிலையும், இன முரண்பாட்டுக்குப் பின்னரான சூழ்நிலையும் கூட ‘பெண்’ பற்றிய பிரச்சினைகளைப் புதிய தளத்துக்கு நகர்த்தியுள்ளன. பாதிக்கப்பட்ட பெண்ணினது உணர்வுகள் இந்தச் சூழ்நிலையின் ‘பிரதி’களாகவும் அமைந்து விடுகின்றன. பெண் இருப்பு, அதனோடு அவள் சார்ந்த சமூக இருப்பு முதலானவையும் கவிதைகளில் வெளிப்படத் தொடங்கின. ஈழத்து முஸ்லிம் பெண் கவிதைகள் என்கிறபோது அதனோடு தொடர்புபட்ட கவிஞர்களைப் பட்டியலிட்டுக் காட்டவேண்டிய தேவையும் இருக்கிறது. ஆனால். அம்முயற்சி இக்கட்டுரையின் காத்திரத்தைக் குறைத்துவிடவும் கூடும். இருப்பினும் அதனூடே மிக முக்கியமான முஸ்லிம் பெண் கவிஞர்களின் கவிதைகளைப் பற்றி அலசுவதாக இக்கட்டுரை அமையும்.

1980களிலே பெண்கள் தமது சமூக இருப்புக் குறித்தும் பணிகள் குறித்தும் அதிகம் விழிப்புணர்வுள்ளவர்களாகச் செயற்பட்டனர். அதன் பிரதான உபாயமாக அவர்கள் இலக்கியத்தைக் கையாளத் தொடங்கினர். அவ்வகையிலே தமிழ் பேசும் ஈழத்துப் பெண் கவிஞர்கள் எழுதிய ‘சொல்லாத சேதிகள்’ என்ற கவிதைத் தொகுதி 1986இல் வெளியானது.

ஈழத்துத் தமிழ் பேசும் சமூகத்துள் முஸ்லிம்களும் உள்ளடங்குவர். அவர்கள் தமிழ் மொழியைப் பேசுபவர்களாயினும் பண்பாடு, அரசியல், சமயம் என்றவகையில் வேறுபட்ட ஒரு இனக் குழுவினராகவே அடையாளப்படுத்தப்பட்டனர். ஈழத்தில் 1980களில் நிலவிய இன முரண்பாடு இந்த அடையாளத்திற்கு அதிக அழுத்தம் கொடுத்தது.

பொதுவாக ஈழத்துப் பெண்களிடம் ஏற்பட்ட விழிப்புணர்ச்சி அதே சமகாலத்தில் முஸ்லிம் பெண்களிடத்தில் ஏற்பட்டதாகக் கூற முடியாது. முஸ்லிம் பெண்கள் கல்வி கற்பதற்கே ஒரு காலத்தில் தடை இருந்தது. சமூக ஈடுபாடுள்ளவர்களாகச் செயற்பட அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. அவள் வீட்டுக்குரியவளாகவும் வீட்டு நிர்வாகத்தை நடத்துவதற்குரியவளாகவுமே கணிக்கப்பட்டாள். சித்திலெப்பையின் ‘அசன்பே’ கதையில் வரும் பாளினாவே முஸ்லிம் மறுமலர்ச்சியின் அடையாளமாவாள். பாளினாவைப் போன்ற முஸ்லிம் பாத்திரத்தைக் காண இச் சமூகத்தில் 100 வருடம் எடுத்திருக்கிறது.

1980களில்தான் முஸ்லிம் பெண்களும் எழுதத் தொடங்கினார்கள். இலங்கை வானொலியிலும் பத்திரிகையிலும் எழுதிய ஒரு சிலரைத் தவிர பெண் என்ற பிரமையுடன் எழுதிய முஸ்லிம்களின் பெண் குரலாக அமைந்தவர் சுல்பிகா. இவரது ‘விலங்கிடப்பட்ட மானிடம்’ என்ற கவிதைத் தொகுதியே முஸ்லிம் பெண்களின் முதல் கவிதைத் தொகுதியாகும். ஆனால், ‘சொல்லாத சேதிகள்’ என்ற ஈழத்துப்

பெண்களின் முதல் கவிதைத் தொகுதியில் முதல் முஸ்லிம் பெண் குரலாக மசூரா ஏ மஜீதின் கவிதைகளே வெளிவந்தது.

ஈழத்துப் பெண்களின் காதல் கவிதைகளின் தொகுப்பாக வெளிவந்த 'உயிர்வெளி' மிக முக்கியமான ஒரு கவிதைத் தொகுதி. இத்தொகுதியிலும் சுல்பிகா, பெண்ணியா, மசூரா ஆகியோர் காதல் அனுபவங்களை வெளிப்படுத்திய கவிதைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவ்வகையில் பெண் அனுபவங்களைச் சுதந்திரமாக வெளிப்படுத்திய முஸ்லிம் கவிஞர்களாக அவர்களைக் கண்டுகொள்ள முடியும்.

எல்லாப் பெண்களும் எழுதுவதுபோன்று முஸ்லிம் பெண்களுக்கு எழுத முடியாதிருந்தது. சுதந்திரத்துடன் அவர்கள் தமது கருத்துகளை முன்வைக்கத் தயங்கினர். ஆணாதிக்க அடக்குமுறையையும் சமய விவகாரங்களையும் அவர்கள் துணிச்சலுடன் முன்வைக்கவில்லை. ஆரம்பத்தில் அவர்களின் கருத்துகள் ஒரு பொதுவெளி சார்ந்ததாகவே இருந்தது. பிற்காலத்தில் தமது சகோதர இனத்தவர்களைப்போன்று எழுதத் தொடங்கினர். முற்குறிப்பிட்ட இருவர்களுக்கும் முன் ஒரு சிலர் எழுதியபோதும் அவர்களுடைய கவிதைகள் நாம் இங்கு பொதுவாகப் பேசுகிற கவிதைக்குள் அடங்குவன அல்ல. அவர்களுள் ஒரு சிலரே தமது கவிதைகளைத் தொகுதிகளாக வெளிக்கொணர்ந்து வந்துள்ளனர். அவற்றுள் முஸ்லிம் பெண்களின் வலியையும் வேதனையையும் கண்டுகொள்ள முடிகிறது.

பெண் தனக்குச் சமூகத்தில் இருக்கின்ற பிரச்சினைகளை வெளிப்படுத்துகின்ற அதேநேரம் அவளுள் அடக்கப்பட்டிருக்கின்ற உணர்வுகளையும் தனது இலக்கியத்தினூடாக வெளிப்படுத்த முனைகின்றாள். பாரம்பரியமாகப் பெண்களுக்கு இருந்து வருகின்ற இளவயதுத் திருமணம், சீதனம், கல்வி மறுப்பு, கலாசார அடக்குமுறை என்பனவற்றைப் பாடுகின்ற பெண்கள் அவர்களால் பேசாப்பொருளாகக் கருதப்படுகிற காதல், பாலியல் உணர்வுகளையும் வெளிப்படுத்துகின்றனர். இதற்கெல்லாம் முன்னணி முஸ்லிம் பெண்களின் கவிதைகளும் விதிவிலக்கல்ல.

உண்மையில் எழுத்து, வாசிப்பு என்பவையெல்லாம் ஒரு மனிதனுக்கு இருக்கின்ற மிகப் பெரும் விடுதலையும் சுதந்திரமுமாகும். எனவே, ஆணிலும் சரி, பெண்ணிலும் சரி தன்னுள் அடக்கப்பட்டிருக்கின்ற – தன்னை ஆக்கிரமித்த உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற வடிகாலாக இலக்கியத்தைக் கொள்கின்றனர். இந்தவகையிலே மனிதனது முழு மொத்தமான அனுபவங்களையும் வெளிப்படுத்துகின்ற சாதனமாக இலக்கியமும் மாறுகின்றது. அந்த அனுபவம் ஆண் நிலைப்பட்டது, பெண் நிலைப்பட்டது என்ற வேறுபாட்டுக்கு அப்பாற்பட்டதாகும்.

முன்னமே குறிப்பிட்டதுபோல சுல்பிகா, மசூரா அவர்களின் சமகாலத்திலே அ்ர.்.பா நூர்தீன், கலைமகள் ஹிதாயா, மஸீஹா புன்னியாமீன், புஸல்லாவை இஸ்மாலிக்கா, கெக்கிராவ சஹானா, இஸ்லாமியச் செல்வி, மரினா இல்யாஸ் என்று பலர் எழுதினர். பின்னர் மஸாஹிரா பாயிஸ், முகைசிறா முகைடீன், றபீக்கா, சம்சுனா என்று சிலரும் எழுதினர். இதில் அ்ர.்.பா ஒரு கவிதைத் தொகுதியையும் கலைமகள் ஹிதாயா 'தேன் மலர்' என்ற கவிதைத் தொகுதியையும் கலைமகள் ஹிதாயாவும் மஸீஹாவும் சேர்ந்து 'இரட்டைத் தாயின் ஒற்றைக் குழந்தை' என்ற கவிதைத் தொகுதியையும் சம்சுனா 'உன் பெயர் குறிக்கும் எழுத்துக்களில்' என்ற தொகுதியையும் வெளியிட்டனர். மற்றவர்கள் தொகுதியாகக் கொண்டுவந்ததை அறியமுடியவில்லை. இவர்கள் அனைவரும் சமூகத்தில் பெண்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளையே தமது கவிதைகளின் பொருளாகக் கொண்டிருந்தனர்.

பல்கலைக்கழகங்களிலிருந்து வெளிவரும் சஞ்சிகைகளிலும் முஸ்லிம் மாணவிகள் பலர் கவிதைகள் எழுதியுள்ளனர். இவ்வகையில் பேராதனைப்

பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்க இதழான இளங்கதிர், முஸ்லிம் மஜ்லிஸின் அல் இன்ஸிராஹ் இதழிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸின் இன்கிலாபிலும் தென்கிழக்குப் பல்கலைக்கழக அதிர்வு, மரங்கொத்தி, அல் இஸ்லாஹ் முதலான இதழ்களிலும் முஸ்லிம் பெண் மாணவர்கள் சமூக, அரசியல், காதல் கவிதைகளை எழுதியுள்ளனர்.

இன்கிலாபில் வெளிவந்த கவிதை ஒன்றில் அரூசியா:

கொடிகள் நாங்கள்
காட்டிலே கொழும்கொம்பு தேடி
காற்றில் அசையும் காட்டுக்
கொடிகளல்ல நாங்கள்
இந்நாட்டுத் தேசியக் கொடிகள்
பம்பரமாய்ச் சுழல்கின்ற முஸ்லிம்கள்
பிறந்த மண்ணிலே
……..
அகதிநிலை மாறிவிட …….

என முஸ்லிம்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்டு அகதிகளாக வாழும் சூழ்நிலையை விபரித்திருக்கிறார்.

லறீனா ஏ ஹக் 'வீசுக புயலே' என்ற கவிதைத் தொகுதியைத் தந்தவர். முஸ்லிம் சமூகத்திலிருந்து புரட்சிகரமான கருத்துக்களை முன்வைக்கின்ற லறீனாவின் சமகாலக் கவிதைகள் கவனத்திற்குரியன. 'புள்ளியைத் தேடும் புள்ளி மான்' என்ற கவிதைத் தொகுதியில் எஸ். நுஹா 'பெண்ணாய்ப் பாரும்' என்ற கவிதையில் சமூகத்தில் பெண் பார்க்கப்படும் செய்தியைக் குறிப்பிடுகிறார்:

என்னவென்று நினைத்தீர் எம்மை?
பெண்ணவளைப் ப்'பமதாய்
பார்க்கின்ற பாதகர்காள்!
என்னவென்று நினைத்தீர் எம்மை?

கண்ட வண்டு தேனாற்றில்
ஜலக்கிரீடை நிகழ்த்தும்
சிறை வலிக்கும் வண்ணாத்திகள்
வந்தமர்ந்து சாந்தம் பெறும் – சத்திரம் ஒப்ப
பரத்தைப் ப்'பங்களாமோ?

மலர் கண் மென்மை
கொண்டு நிற்கும் பெண்மை – எனின்
இழிசெயல் உவமை இயைபு காண்!
ப்'பமாய் அன்றி
பெண்ணாகவே பெண்ணைப் பார்க்கமாட்டீரோ?

மேலும், சப்னா அமீன் எழுதிய 'நிலாச்சோறு' பெண் பற்றியும் அரசியல், காதல் இயற்கை உணர்வுகளையும் வெளிப்படுத்தும் தொகுதி. 'ஒரு மலரின் பயணம்' மாணவி ஒருவரின் கவிதைத் தொகுதி. 'உன்னை நினைப்பதற்கு' என்று வெளிவந்த தொகுதியில் உள்ள 27 கவிதைகளில் கலைமகள் ஹிதாயா, சுல்பிகா 'ரீப் உட்பட 15 பெண்கள் கவிதை எழுதியுள்ளனர். 'எழுவான் கதிர்கள்' என்ற கவிதைத் தொகுதியில் கலைமகள் ஹிதாயா, மசூரா ஏ மஜீட், ஜெரீனா கரீம் என்ற மூவரும் பெண்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் பல கவிதைகளை எழுதியுள்ளனர். மொத்தத்தில் பார்க்கிறபோது ஈழத்தில் அதிக பெண் கவிஞர்கள்

எழுதி வருகின்றனர். ஆனால், சமூக சூழ்நிலைகள் காரணமாகத் தமது திருமண வாழ்க்கைக்குப் பிறகு இவர்களுள் பலர் கவிதைகள் எழுதுவதை விட்டுவிட்டனர்.

முஸ்லிம் பெண்களின் மிக முக்கியமான சமூகப் பிரச்சினை அவர்கள் பொருளாதாரத் தேவைகளை ஈடு செய்வதற்கும் சீதனப் பிரச்சினைக்குத் தீர்வு காணவும் வெளிநாடுகளுக்குச் சென்று தொழில் புரிவது. அப்பிரச்சினையைப் பல கவிஞர்கள் தமது கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளனர். அவ்வகையில், 'இரட்டைத் தாயின் ஒற்றைக் குழந்தை' தொகுதியில் பின்வரும் கவிதை கவனத்திற்குரியது:

நாங்கள்
மத்திய கிழக்கு நாடுகளில்
வேலை பார்க்கும்
பணிப்பெண்கள்
சீதனத்திற்காக
கற்பிழந்த கன்னிகள்!

அதேபோன்று 'பெயல் மணக்கும் பொழுது' கவிதைத் தொகுதியில் அந்த அனுபவத்தை 'அம்மா வந்துவிடேன்' என்ற கவிதையில் லுணுகலை ஹஸீனா புஹாரி வெளிப்படுத்துகிறார்:

அரபு நாட்டு அசிங்கங்களைக் கழுவி
நீ அனுப்பும் ரியாலும், டினாரும்
வேண்டாம்
………………
………………

அக்காவின் கணவரின்
அந்த இரகசியத்
தொடுகைகள்
………………
………………

காம வல்லூறுகளின் பார்வையிலிருந்து நான்……
நீ வரும்போது உன் மகள்
அக்கினிக்கு 'ஆகுதீ' ஆகிவிடுவனோ
என்ற பயம்
அதனால் வந்துவிடேன் அன்னையே
கூழோ, கஞ்சியோ உன்னோடு போதும்.

இந்தத் தடைகளைத் தாண்டி ஈழத்தில் சுல்பிகா, மசூரா, பஹீமாஜஹான், பெண்ணியா, அனார், ஸர்மிளா ஸெய்யித் என்ற ஐவரும் இன்னும் காத்திரமான பெண் உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற கவிஞர்களாக உள்ளனர். மசூராவின் தொகுதி வெளிவராவிடினும் பெண் தொடர்பான எல்லாத் தொகுதிகளிலும் அவரது கவிதைகள் உள்ளடங்கி இருக்கின்றன. தான் ஓர் 'இலக்கியப் புத்திரி'யாக வாழ்வதில் உள்ள சங்கடங்களை மசூரா தனது கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளார்.

சுல்பிகா பெண்களின் பிரச்சினைகளை மிக வெளிப்படையாகப் பேசிய மிக முக்கியமான கவிஞர். பெண்ணிய நிலைப்பாட்டில் நின்று கொண்டு மிகச் சுதந்திரமாக அவர் தனது கருத்துக்களை முன்வைத்தார்:

உனக்கு உள்ளது போல
உரிமைகள் எனக்கும் உண்டு
ஏனெனில்
நான் மானிடப் பெண்ணாகப்
பிறந்திருக்கின்றேன்
எனக்கும் உனக்குமிடையிலுள்ளது
ஓர் ஒப்பந்தம் மட்டுமே
என் உயிருக்கான உயிலல்ல

பெண்கள் வெளிப்படையாகப் பேசத் தயங்குகின்ற தாம்பத்திய சிக்கல், பாலியல் முரண் கருத்துக்களையும் சுல்பிகா தனது கவிதைகளில் வெளிப்படுத்துகின்றார்.

ஈழத்தின் வடமேல் மாகாணத்திலிருந்து தமிழ்க்கவிதை எழுதுகிற பஹீமாஜஹான் ‘ஒரு கடல் நீரூற்றி’, ‘அபராதி’ முதலிய கவிதைத் தொகுப்புக்களை வெளியிட்டிருக்கிறார். இந்த நாட்டின் போர்ச் சூழலில் நேரடியாகப் பாதிக்கப்படாத அவர் போரையும் அதன் காயங்களையும் தனது கவிதைகளில் வெளிப்படுத்துகிறார். ஒரு பெண்ணிலிருந்து மிக தைரியத்தோடு வெளிவருகிற புரட்சிகரமான கருத்துக்கள் அவரது கவிதைகளில் உள்ளன. எப்போதுமே மானுடத்தின் பண்புகளுக்காகக் குரலெழுப்பும் அவர் இஸ்லாமிய உணர்வுகளையும் தனது கவிதைகளில் வரைந்து கட்டியுள்ளார். அவ்வகையில் அவரது ‘இறுதி வாக்குமூலம்’ என்ற கவிதை முக்கியமானது. இவரது கவிதைகளும் அனாரின் கவிதைகளும் ‘மரணத்தில் துளிர்க்கும் கனவு’ என்ற கவிதைத் தொகுதியில் உள்ளடக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

எம்.ஐ. நஜீபா என்ற இயற்பெயரைக் கொண்ட பெண்ணியா ‘என் கவிதைக்கு எதிர்த்தல் என்று தலைப்பு வை’, ‘இது நதியின் நாள்’ முதலான கவிதை நூல்களின் ஆசிரியர். பொதுவாகப் பெண்ணிய அரசியலையே பேசும் நஜீபாவின் கவிதைகள் தான் சார்ந்த சமூகத்திலிருந்து வெளிச்செல்லாதவை. பெண்ணின் உள்ளுணர்வை மிக அற்புதமாக வெளிப்படுத்தும் அவர் கவிதைகள் மிகக் காத்திரமானவை. ‘தூதுவன்’ என்ற கவிதையில் அவன் வருவதும் அவன் உலகிற்கு அழைத்துச் செல்வதும் அவளை மடியில் உறங்கச் செய்வதும் இறுதியில்,

………..
தேவதை
கண்விழித்தபோது
தூதுவன்
பாடிக் கொண்டிருக்கிறான் -
சனியன்
நாயே
மூதேவி என்று…

இப்படி முடிவதும் இந்தச் சமூகத்தில் பெண் ஏந்தியிருக்கிற பாத்திரத்தை மிக லாவகமாகக் கொண்டுவருகிறது. காதல் உணர்வுகளையும் வெளிப்படுத்தும் பல கவிதைகளைக் கொண்டுள்ள பெண்ணியாவின் தொகுதிகள் கவனத்திற்குரியன.

இ‘‘த் றீஹானா முகமட் அஸீம் என்கின்ற அனார் ‘ஓவியம் வரையாத தூரிகை’, ‘எனக்குக் கவிதை முகம்’, ‘உடல் பச்சை வானம்’, ‘பெருங்கடல் போடுகிறேன்’ முதலான கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். பாரம்பரிய இஸ்லாமிய பிரதேசத்தில் இருந்து ஒரு முஸ்லிம் பெண் கவிஞராகத் தலைநிமிர்வது மிக முக்கியமான விடயம். அதேநேரம், பெண் கவிஞராகத் தன்னைப்

பிரகடனப்படுத்திக் கொண்டு எழுதுகின்றபோது எதிர்நோக்குகின்ற சவால்களும் அனந்தம். ஆனால், இத்தனைக்குள்ளும் ஒரு சமூகத்தின் பிரதிநிதியாகவும் ஒரு சூழலின் பிரதிநிதியாகவும் பெண்ணின் பிரதிநிதியாகவும் அனார் தனது நான்கு கவிதைத் தொகுதிகள் மூலமும் தன்னை வெளிப்படுத்தி இருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

தனது வாழ்வின் இளமையை, பெண்ணின் சுதந்திரத்தைத் தொலைத்த உணர்வுகளை அவரது 'தேய்பிறை' என்ற கவிதை மிக அற்புதமாக வெளிப்படுத்திக் காட்டுகின்றது. அதேநேரம் அவர்,

முளைத்தெழும்ப விடாமல்
பிறையை
எவரால்
சிறைவைக்க முடியும்.

என்று கூறுவதன் மூலமும் இந்தப் பிறை என்ற அடையாளம் இவ்விரு கவிதைகளிலும் ஒரு முஸ்லிம் பெண்ணின் சுதந்திரத்தை அவாவுதலாக இருக்க முடியும். அனார் வாழ்ந்த சமூகத்தில் உள்ள இனக் குரோதத்தினையும் அடையாளப்படுத்துவதாக அவருடைய 'வஞ்சனை' என்ற கவிதை அமைகிறது:

எம்மிடமிருந்த
எல்லாமே
உமக்கு இடைஞ்சலாய் தோன்றிற்று
எம்முட உயிரும் உணர்ச்சியும்
உடைமையும் கூட
……………………
கடைசியாய்
நீர் இத்தேசத்தின்
சௌபாக்கிய மனிதனாய் இருக்க
நாம் நாடற்று
நாதியற்று

இவ்வாறு ஈழத்துத் தமிழ் பேசும் முஸ்லிம் சமூகம் அடிமைப்பட்டுக் கிடந்ததை உணர்வுடன் பேசுகிறார்.

'மேலும் சில இரத்தக் குறிப்புகள்' என்ற கவிதையில் பெண்ணுக்கு உடலியல் ரீதியாக ஏற்படுகின்ற மாதாந்த அனுபவத்தை மிக அற்புதமாக வெளிப்படுத்துகிறார். ஒரு பெண்ணின் துன்பத்தின் அடையாளமாகவும் வாழ்வின் நெருக்குதலாகவும் வன்முறையின் பிரதி விம்பமாகவும் பார்த்திருக்கின்ற அவரது நோக்கு கவனிக்கத்தக்கது.

ஸர்மிளா ஸெய்யித் 'சிறகு முளைத்த பெண்' என்ற கவிதைத் தொகுதியைத் தந்தவர். இலக்கிய உலகிற்குள்ளே வருகிறபோதே காட்டமான விமர்சனங்களை எதிர்கொண்ட இவர் மிகச் சுதந்திரமாகத் தனது கருத்துக்களை அழகியலோடு வெளிப்படுத்துகிற பெண்களின் மிக முக்கியமான இளம் கவிஞர். 'ஆத்ம காதல்' உணர்வுகளை வெளிப்படுத்துகிற அவரது கவிதை பெண்ணின் துயரங்களை வெகு வெளிப்படையாகப் பேசுகிறது. இந்தப் பிரதேசத்தின் இனச் சங்காரத்தின் துயரத்தை 'இறைவா கண்களில் காட்டு' என மிகக் கோபாவேசத்துடன் வெளிப்படுத்துகிறார்:

சோனிகள் என்று எங்களை
இளக்காரமாய்ப் பேசும்

அவனது நாக்கை அறுத்து
குழிதோண்டிப் புதைக்க வேண்டும்
வெறியும் குரோதமும் பொறாமையும் வன்மமும்
நிறைந்த அவன் இதயம், ஈரக்குலையை
வெவ்வேறாய் வெட்டி வீச வேண்டும்.

முஸ்லிம் அரசியலையும் அவர் அவ்வப்போது விமர்சிக்கின்ற கவிஞர்களில் ஒருவராவார். 'மாபெரும் தலைவனை நினைத்து' அவர் எழுதிய கவிதை கவனத்திற்கு உரியது. எல்லோரையும் போல காதல் உணர்வுகளையும் பெண் உணர்வோடு பேசுகிற ஸர்மிளா ஸெய்யித் மிக நம்பிக்கைக்குரிய நமது கவிஞர்களுள் ஒருவர்.

ஈழத்துத் தமிழ்ச்சமூகம் போரினால் அடைந்த துன்பத்தை 'மரணத்துள் வாழ்வோம்' என்ற தொகுதி வெளிப்படுத்தியதுபோல ஈழத்து முஸ்லிம் சமூகத்தின் யுத்த பாதிப்பின் கதைகளை 'மீஸான் கட்டைகளின் மீள எழும் பாடல்கள்' என்ற தொகுதி ஒட்டுமொத்தமாக வெளிப்படுத்துகிறது. முஸ்லிம் சமூகம் யுத்தத்தால் எதிர்கொண்ட துன்பத்தையும் இழப்புக்களையும் அத்தொகுதியில் அனார், பஹீமாஜஹான் முதலானோர் வெளிப்படுத்தியுள்ளனர்.

மொத்தத்தில் ஈழத்து முஸ்லிம் பெண்களின் கவிதைகள் தனியாக ஆய்வு செய்யப்பட வேண்டியன. அவர்களது சமூக நெருக்குவாரம் அவர்களுள் பெரும்பாலானோரைத் தொடர்ந்து எழுதுவதிலிருந்தும் பிரித்து வைத்திருக்கிறது. மிக நுண்மையாக அவர்களது கவிதைகளை ஆய்வு செய்யும்போது அவர்கள் எதிர்நோக்குகின்ற தனியான சமூக, அரசியல் பிரச்சினைகளைக் கண்டுகொள்ள முடியும். இத்தகைய ஆய்வு மிக அவசியமானது. அதேநேரம் முஸ்லிம் பெண்கள் பலரின் உதிரியாக எழுதப்பட்ட கவிதைகளை ஒருங்குசேர தொகுக்க வேண்டிய அவசியமும் உள்ளது. அல்லது மிக முக்கியமான கவிஞர்களின் வெளிவராத தொகுதிகளைக் கொண்டு வரவேண்டிய தேவையும் உள்ளது.

இயன்ற அளவு இக்கட்டுரையில் ஆங்காங்கே எழுதிய ஈழத்து முஸ்லிம் பெண்களின் தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன. அந்தத் தேடல் இக்கட்டுரையின் காத்திரத்தைக் குறைத்திருந்தாலும் ஈழத்துத் தமிழ்க் கவிதைக்கான முஸ்லிம் பெண்களின் பங்களிப்பைக் கண்டுகொள்வதற்கான தேவையைப் பூர்த்தி செய்வதாக அமையும்.

**பயன்பட்ட நூல்கள்:**

01. அனார், (2013), பெருங்கடல் போடுகிறேன், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்.

02. அனார், (2009), உடல் பச்சை வானம், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்.

03. அனார், (2007), எனக்குக் கவிதை முகம், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்.

04. அனார், (2004), ஓவியம் வரையாத தூரிகை, மூன்றாவது மனிதன் வெளியீடு, கொழும்பு.

05. சித்திரலேகா மௌனகுரு, (1999), உயிர்வெளி, சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம், மட்டக்களப்பு.

06. நு.ஃமான், எம்.ஏ., (1982), அழியா நிழல்கள், நர்மதா வெளியீடு, சென்னை.

07. (1986), சொல்லாத சேதிகள், பெண்கள் ஆய்வு வட்டம், யாழ்ப்பாணம்.

08. ஸர்மிளா ஸெய்யித், (2012), சிறகு முளைத்த பெண், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்.

09. சிபானா சனூன், (2001), புதிய பாதை, சித்ரலியா பதிப்பகம், கொழும்பு.

10. நுஹா, எஸ்., (2007), புள்ளியைத் தேடும் புள்ளி மான்இ தேசிய கலை இலக்கியத் தேனகம், சம்மாந்துறை.

11. சம்சுனா, (2012), உன் பெயர் குறிக்கும் எழுத்துக்களில், வாழும் கலை இலக்கிய வட்டம், சம்மாந்துறை.

12. மௌனகுரு, சி., சித்திரலேகா, மௌ., நு.ஃமான், எம்.ஏ., (1979), இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம், வாசகர் சங்கம், கல்முனை.

13. மங்கை, அ., (2005), பெண்ணிய அரசியல், பரிசல், சூளைமேடு, சென்னை.

14. மங்கை, அ., (2007), பெயல் மணக்கும் பொழுது - ஈழப் பெண் கவிஞர்கள் கவிதைகள் (தொகுப்பு), மாற்று, சென்னை.

15. அ்'ர.ஃப் சிஹாப்தீன், ஸதக்கா, ஏ.ஜி.எம். ஸதக்கா, நளீம், எஸ்., (2002), மீஸான் கட்டைகளின் மீள எழும் பாடல்கள், உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு, கொழும்பு.

16. தீபச்செல்வன், (2011), மரணத்தில் துளிர்க்கும் கனவு, ஆழி பப்ளி'ர்ஸ், பாலாஜி நகர், அய்யப்பன்தாங்கல், சென்னை.

17. லறீனா ஏ. ஹக், (2003), வீசுக புயலே! (கவிதைத் தொகுதி), வர்தா பதிப்பகம், முறுதகஹமுல.

18. நஜீபா, எம்.ஐ., (பெண்ணியா), (2008), இது நதியின் நாள், சிறகுநுனி, கொழும்பு.

19. (1998), ஈழத்துச் சமகால தமிழ் இலக்கியம் தொகுப்பு 1, விபவி, கலாசார மையம், நுகேகொட.

20. சுல்பிகா, இ., (1995), விலங்கிடப்பட்ட மானுடம், தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சவுத் ஏசியன்ஸ் புக்ஸ், சென்னை.

21. சுல்பிகா, இ., (2000), உயிர்த்தெழல், முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி, கொழும்பு – 05.

22. சுல்பிகா, இ., (2003), உரத்துப் பேசும் உள்மனம், முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி, கொழும்பு – 05.

23. ஹிதாயா, மஸீதா, (2000), இரட்டைத் தாயின் ஒற்றைக் குழந்தை, சிந்தனை வட்டம், உடதலவின்னை, இலங்கை.

24. சப்னா அமீன், (2011), நிலாச்சோறு, லக்'டோ மீடியா நெற்வேக், சாய்ந்தமருது, இலங்கை.

25. சப்னா அமீன், (2011), உன்னை நினைப்பதற்கு, லக்'டோ மீடியா நெற்வேக், சாய்ந்தமருது, இலங்கை.

26. விஜயலட்சுமி சேர், (தொ.), (2009), கண்ணாடி முகங்கள், சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம், மட்டக்களப்பு.